யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்
கரவெட்டி.

# பரிசளிப்பு விழா

பிரதம விருந்தினர்

**உயர் திரு. க. நவரட்ணராஜா**

(பிரதித் திட்டப் பணிப்பாளர் - நிக்கொட்)

***04-12-2005***

## வருடாந்த அறிக்கை

# நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- தேவாரம்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்புரை
- ஆண்டறிக்கை
- தலைமையுரை
- மாணவர் உரைகள்
- பரிசில் வழங்குதல்
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- கலை நிகழ்ச்சிகள்
- நன்றியுரை.
- பாடசாலைக் கீதம்

# வருடாந்த அறிக்கை - 2005

எமது மதிப்பிற்குரிய பிரதம விருந்தினர் அவர்களே, சிறப்பு விருந்தினர் அவர்களே, திணைக்கள அதிகாரிகளே, அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே, வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் ஆசிரியர்களே, எமது வளம் மிகு மாணவச் செல்வங்களே, ஆசிரியர்களே, உங்கள் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைய நிகழ்வின் பிரதம விருந்தினராக நிக்கொட் பிரதித் திட்டப் பணிப்பாளர் திரு.க.நவரட்ணராஜா அவர்கள் கலந்து சிறப்பிப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது. இளம் வயதில் யாழ்மாவட்டத்தின் பாரிய அபிவிருத்தி கட்டுமானத்தை சிறப்புடன் செய்துகொண்டிருக்கும் ஒருவரை எமது மாணவர் சமூகத்திற்கு அறிமுகப்படுத்தி வைப்பதில் எமது பாடசாலைச் சமூகம் பெருமிதம் கொள்கின்றது. அத்துடன் வடமராட்சி வலயம் பாடசாலைகளிற்கு பல வளங்களையும் வழங்கிக்கொண்டிருக்கும் சிறுவர் பாதுகாப்பு நிதிய யாழ்மாவட்ட இணைப்பாளர் திரு.அ.பேரின்பநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்வது இந்நிகழ்விற்கு மேலும் சிறப்பூட்டுகின்றது.

## எமது ஆசிரியர்கள்

எமது ஆசிரியர்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகளுடன் அறிக்கையை ஆரம்பிக்க விரும்புகின்றேன். மிகச்சிறப்புடனும், துடிப்புடனும், கூட்டுப் பொறுப்புடனும் செயற்பட்டு முதன்மை நிலைப் பெறுபேறுகளை வித்தியாலத்திற்கு தந்து

கொண்டிருக்கின்ற தன்னலமற்ற வாண்மை விருத்தியுடைய ஆசிரியர் குழாத்துடன் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன் என்ற பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் இவ்வறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

## மாணவர் தொகை

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 01 | 31 | 27 | 58 |
| 02 | 22 | 20 | 42 |
| 03 | 27 | 28 | 55 |
| 04 | 27 | 28 | 55 |
| 05 | 35 | 25 | 60 |
| | 142 | 128 | 270 |

## ஆளணி விபரம்

***அதிபர்*** : திரு.இளையதம்பி இராகவன்

***ஆசிரியர்கள்*** : செல்வி விமலரதி சுப்பிரமணியம்
திருமதி ரேவதி யோகலிங்கம்
செல்வி ஆனந்தநாயகி கந்தசாமி
திருமதி சுமதி மகேஸ்வரன்
திருமதி ஜெயவதனி தேவநேசன்
திருமதி மாலோகநாயகி துரைசிங்கம்

திருமதி கிருஷ்ணகுமாரி புவனேந்திரம்

செல்வி ஞானசசி தியாகராஜா

திருமதி வனிதா கஜேந்திரன்.

***தொண்டராசிரியர்கள் :***

செல்வி சாந்தினி நடராஜா.

செல்வி அனுஷா முருகேபிள்ளை.

## பாடசாலைச் செயற்பாடுகள்.

**கால்கோள் விழா.**

தரம் 1 மாணவர்களை பாடசாலைக்கு அழைக்கும் கால்கோள் விழா 27.01.2005 அன்று நடைபெற்றது. இவ்விழாவின் பிரதம விருந்தினராக கல்வி அபிபிருத்திக்குரிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.ஆ.ராஜேந்திரன் அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன் தரம் 2 மாணவர்களால் தரம் 1 மாணவர்கள் வரவேற்கப்பட்டு கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

**மெய்வன்மைப் போட்டி.**

23.02.2005 அன்று பாடசாலை மைதானத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர் திரு.சி.சிவராசா அவர்கள் கலந்து சிறப்பித்தார். வெற்றியீட்டிய அனைத்து மாணவர்களிற்கும் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

**சமயச் செயற்பாடுகள்.**

பாடசாலையின் பாரம்பரியத்திற்கேற்ப வெள்ளி ஆராதனைகள் வகுப்பு ரீதியாக வெகுசிறப்பாக நடைபெற்று வருகின்றன. அத்துடன் திருவள்ளுவர், நாவலர் மற்றும் நான்கு நாயன்மார்களினதும் குருபூசை தினங்கள் சிறப்பு சொற்பொழிவுகளுடனும், மாணவர் நிகழ்வுகளுடனும் நடைபெற்று வருகின்றன. அதேபோன்று நவராத்திரிப் பூஜைகளும், வாணிவிழா நிகழ்வுகளும் இம்முறையும் சிறப்பாக இடம்பெற்றன. வாணிவிழாப் போட்டிகளில் நடுவர்களாக கடமையாற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், நடனப் போட்டிகளிற்கு நடுவர்களாக கடமையாற்றிய கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி ஆசிரிய மாணவிகளிற்கும் எமது நன்றிகள். அத்துடன் தச்சை விநாயகராலய கூட்டுப் பிரார்த்தனை வகுப்புகளிலும், தச்சை ஐங்கரன் அறநெறி வகுப்புகளிலும் பெருந்தொகையான மாணவர்கள் கலந்துகொள்வதும் குறிப்பிடத்தக்கது. வழமைபோன்று இம்முறையும் திருவள்ளுவர் தினப் போட்டிக்குரிய பரிசுகளை வழங்கிய திரு.ச.செவ்வந்திநாதர் அவர்களிற்கும் எமது நன்றிகள்.

**மாணவர் மன்றம்.**

ஒவ்வொரு ஆண்டைப் போன்றும் இவ்வருடமும் மாதத்தில் இரண்டு தடவைகள் மாணவர் மன்றச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. எமது மாணவர்கள் பல்வேறுபட்ட போட்டிகளிலும் வெற்றியீட்டுவதற்கு இவ் மாணவர் மன்றச் செயற்பாடுகளே பெரிதும் உதவியாகவுள்ளன.

**சிறுவர் தினம்.**

வழமை போன்று இம்முறையும் ஒக்டோபர் முதலாந் திகதி சிறுவர் தினம் இடம்பெற்றது. சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டன.

**ஆசிரியர் தினம்.**

எமது பெற்றோர்களினால் சிறப்பான முறையில் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் அந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் திரு.ந.பாஸ்கரன் அவர்கள் கலந்து சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்.

**சுற்றுச் சுழல் செயலணி**

எமது பாடசாலையின் சுற்றுச் சூழலைப் பேணிப் பாதுகாத்து வளப்படுத்தும் நோக்குடன் சுற்றுச் சூழல் செயலணி ஆரம்பிக்கப்பட்டதுடன் அது சிறப்பாக இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

**ஆங்கில வகுப்புக்கள்**

கல்வித் திணைக்களத்தின் வழிகாட்டலின்படி ஆங்கில வகுப்புகள் நடைபெற்று வருவதுடன், இதில் பெருந்தொகையான மாணவர்கள் பங்குபற்றி பயன்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

**ஆசிரியர் நலன்புரிச்சங்கம்**

எமது ஆசிரியர் நலன்புரிச்சங்கம் ஆசிரியர், மாணவர் நலனைக் கொண்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இச்சங்கம் நடாத்தும் சிற்றுண்டிச்சாலை இலாபத்திலிருந்து மின்சாரக் கட்டணம்

செலுத்தப்படுவதுடன் பாடசாலை சுகாதார சேவைக்குரிய செலவும் செய்யப்படுகின்றது.

**தமிழ்த்தினப் போட்டி**

வழமை போன்று இவ்வாண்டும் கோட்ட மட்டத்தில் ஏழு போட்டிகளில் பங்குபற்றிய நாம் ஐந்து போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்று வலயமட்ட போட்டிகளில் பங்குபற்றினோம். அங்கு எமது மாணவர்கள் மிகவும் திறமையாகச் செயற்பட்டு,

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | - | மூன்று போட்டிகள் |
| இரண்டாம் இடம் | - | ஒரு போட்டி |
| மூன்றாம் இடம் | - | ஒரு போட்டி |

என்ற ரீதியில் வெற்றி பெற்றோம். முதல் இடத்தைப் பெற்ற மூன்று போட்டிகளும் மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றின. அங்கு வாசிப்பு முதலாமிடத்தையும், பேச்சு, தனிநடனம் இரண்டும் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. மாவட்ட மட்டப் போட்டியில் வாசிப்பு நிகழ்வில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்ட செல்வன் துரைசிங்கம் மாலோகன் மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றி இரண்டாமிடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தார்.

புலமைப்பரிசில் பரீட்சை - 2005.

| தோற்றியோர் | சித்தி பெற்றோர் |
|---|---|
| 60 | 14 |

இம்முறை புலமைப்பரிசில் பரீட்சையில் எமது பாடசாலை மாணவர்கள் மிகவும் சிறப்பான முறையில் பரீட்சையை எதிர்கொண்டு பதினான்கு மாணவர்கள் சித்தி பெற்று வடமராட்சி வலயத்தில் அதிகூடிய எண்ணிக்கையானோர் சித்திபெற்றனர், என்ற பெருமையை வித்தியாலயத்திற்கு தேடித்தந்துள்ளார்கள். அத்துடன் நூறு புள்ளிகளிற்கு மேல் இருபத்தேழு மாணவர்களும் எழுபது புள்ளிகளிற்கு மேல் நாற்பத்து இரண்டு மாணவர்களும் புள்ளி பெற்றுள்ளனர். இம்மாணவர்களை நான் வாழ்த்துவதுடன் இவ்வெற்றிக்குக் காரணமாக இருந்த எமது வித்தியாலய அமைத்து ஆசிரியர்களையும் பாராட்டுகின்றேன். அத்துடன் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து நடாத்திய மகேசன் விளையாட்டுக் கழக தலைவர், செயலாளர், அங்கத்தவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். எமது பாடசாலைப் பெறுபேறு தொடர்பாக மிகச்சிறப்பான முறையில் செய்திகளைப் பிரசுரித்த தினசரிப் பத்திரிகைக்கும் இவ்விடத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

## அமரர் வ.சின்னையா ஞாபகார்த்த நூலகம்.

ஆரம்பப் பாடசாலையென்னும் நூலகத்தின் அவசியம் பற்றி பல தரப்பினருடன் தொடர்பு கொண்டதன் பயனாக சிறந்த நூலகமொன்று அமைக்கக் கூடியதாக இருந்தது. வலயக் கல்வித் திணைக்கள நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு திரு.தி.யோகானந்தன், திரு.சி.மனோகரன், திருமதி சிவசோதி செந்தில்நாதன், திரு.சு.சிவகுமார் ஆகியோரின் உதவியுடன் தளபாடம், மின்சாரம், நிலவிரிப்பு, வர்ணம் பூசுதல் போன்ற வேலைகள் செய்யப்பட்டன. அத்துடன் வலயக்கல்விப் பணிமனையால்

வழங்கப்பட்ட பத்து பிளாஸ்ரிக் மேசையும், முப்பது பிளாஸ்ரிக் கதிரையும் கொண்டு வளமுடைய நூலகமாக பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ.கி.சிவனேசன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமராட்சி, யாழ் வலய கல்விப்பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்களென பெருந்தொகையானவர்கள் வந்து சிறப்பித்ததுடன் பெருந்தொகையான நூல்களையும் அன்பளிப்புச் செய்து எமது முயற்சிக்கு சிறப்பாக பங்களிப்புச் செய்தனர். திறப்புவிழாவன்று முந்நூற்று ஐம்பத்து நான்கு பெறுமதி வாய்ந்த நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. அவர்கள் அனைவரது விபரங்களும் எமது நூலகப் பதிவேட்டில் பேணப்படுகின்றது.

## இவ்வாண்டின் பௌதீகவளச் செயற்பாடுகள்.

(1) திரு.நி.பிரதீபன் (பாடி) தம்பதியினரால் சுமார் ஐம்பதாயிரம் பெறுமதியான ஒலிபெருக்கி சாதனம் கடந்த ஆண்டு பரிசளிப்பு விழாவன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.

(2) எமது பாடசாலையில் நீண்டகாலம் அனைவரும் பாராட்டும்படி பணிசெய்த அமரர் செல்லையா உபாத்தியாயர் ஞாபகார்த்தமாக அவரது பேரன் திரு.ந.வாகீசன் அவர்களால் கணிணியொன்று அன்பளிப்பு செய்யப்பட்டது.

(3) கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கி.சிவனேசன் அவர்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ரூபா. 70,000 ஒதுக்கியுள்ளார். இந்நிதி நூலகத்தின் லெவல்சீற் அடிக்கப்பயன்படுத்தப்பட்டது.

(4) சிறுவர் பாதுகாப்பு நிதியம் நன்கொடைத் திட்டத்தின் கீழ் ரூ.250,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

(5) யுனிசெவ் நிறுவனம் ரூபா.188,000 ஒதுக்கீடு செய்துள்ளது.

இவ்விருத்தியும் வடமராட்சி வலயக்கல்வித் திணைக்கள அனுமதியின் கீழ் நூற்றாண்டு நிறைவு மண்டபம் வகுப்பறையாக அமைக்கப்பட்டு வர்ணம் பூச நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(6) புலமைப் பரிசில் பரீட்சையில் எமது பாடசாலையில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களில் ஒருவரான செல்வி ஜசீதா சற்குருநாதன் என்பவரால் நூலக பாவனைக்கென ஒரு மேசையும் ஆறு கதிரைகளும் அன்பளிப்பு செய்யப்பப்பட்டன.

(7) சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் இருபத்தாறு மேசைகளும் நாற்பது கதிரைகளும் வழங்கப்பட்டது.

மாணவர்களின் தேவைக்கேற்ப அவர்களின் பயன்கருதி பலவளங்களையும் வழங்குகின்ற அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நிறைவேற்றப்பட வேண்டிய தேவைகள்.**

1) பாடசாலை சுற்று மதில் சீமெந்து பூசப்பட்டு வர்ணம் பூசுதல்.

2) நூற்றாண்டு நிறைவு மண்டபத்திற்கு லெவல்சீற்றடித்து மின்சாரவசதி செய்தல்.

3) சிறுவர் பூங்கா அமைத்தல்.

4) நூற்று ஐந்து ஆண்டு கால பழமை வாய்ந்த மண்டபத்தை அகற்றி வகுப்பறை, வழிபாட்டு மண்டபம், கலையரங்கு ஆகியன அடங்கிய மாடிக்கட்டடம் அமைத்தல்.

5) 40'×20' மண்டபம் நூலகம் ஆகியவற்றிற்கு நிலம் மீள அமைத்தல்.

6) மாணவர்கள் பயன்பாட்டிற்காக கணணிக் கூடம் அமைத்தல்.

7) ஆசிரியர், மாணவர்களுக்கான தளபாடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யதல்.

மேலே கூறப்பட்டுள்ள தேவைகளை தமது வசதிக்கும் செயற்திறனுக்குமேற்றவாறு பெற்றோர், பழைய மாணவர் மற்றும் எமது திணைக்கள அதிகாரிகள் பூர்த்தி செய்து தருவார்கள் என்ற பூரண நம்பிக்கை எனக்குண்டு.

பொருத்தமான முறையில் வளங்களை அமைத்து எமது மாணவர்களை பல்துறையாற்றல், ஆளுமையுடைய மாணவர்களாக வளப்படுத்த வேண்டும் என்பதே எமது நோக்காகும் எமது பாடசாலையின் இந்த இலக்கு நோக்கி சிறப்புடன் செயற்பட வழிகாட்டுகின்ற, ஒத்துழைப்பு வழங்குகின்ற அனைவருககும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

இன்றைய இவ் நிகழ்வு தங்கராஜா புலமைப்பரிசில் நிதிய நிதியில் இருந்தும் தரம் 5 மாணவர்களின் பெற்றோர்கள் வழங்கிய நிதியில் இருந்தும் சிறப்புடன் நிகழ்கின்றது. அத்துடன் திருமதி இந்திராணி பாஸ்கரன் புலமைப்பரிசில் நிதியத்தில் இருந்து பெற்றுக் கொண்ட ருபா.5,000 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களிற்கு பகிர்ந்து வழங்கப்படுகின்றது.

மாணவர்களினது பல்வேறு தேவைகளையும் இனங்கண்டு அதற்கேற்ற வளங்களையும் நிதியையும் வழங்கி அவர்களிற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி வரும் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு இவ் அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

## " உயர்வு தரும் கல்வி "

## பரிசில் பெறும் மாணவர்கள்

### வகுப்புரீதியான முதன்மை மாணவர்கள்.

| தொ.எண் | தரம் | | மாணவர் பெயர் |
|---|---|---|---|
| 01 | 1A | 1) | சி.லக்ஷிகா |
| 02 | | 2) | க.தர்சனா |
| 03 | | 3) | பு.கஜன் |
| 04 | 1B | 1) | பே.ரகீஷன் |
| 05 | | 2) | கு.நிதுஷா |
| 06 | | 3) | பி.வைஷ்ணவி |
| 07 | 2 | 1) | ஜெ.நிஷோபா |
| 08 | | 2) | சு.திலக்சன் |
| 09 | | 3) | சு.சரண்யா |
| 10 | 3A | 1) | ம.துஷிதா |
| 11 | | 2) | க.கஜரூபன் |
| 12 | | 3) | த.கார்த்தீபன் |

| | | | |
|---|---|---|---|
| 13 | 3B | 1) | பா.வினோஜன் |
| 14 | | 2) | பி.துஸ்யந்தினி |
| 15 | | 3) | பு.செந்தூரன் |
| 16 | 4A | 1) | ஜெ.வசீகரன் |
| 17 | | 2) | இ.கிரிதர் |
| 18 | | 3) | து.பிரதிகா |
| 19 | 4B | 1) | பா.இலக்சனா |
| 20 | | 2) | த.டினேஸ் |
| 21 | | 3) | செ.ஊர்மிளா |
| 22 | 5A | 1) | த.கோகுலன் |
| 23 | | 2) | சி.விஷ்ணுபிரதாப் |
| 24 | | 3) | சு.வினோதன் |
| 25 | 5B | 1) | த.பிரவீன் |
| 26 | | 2) | ச.ஜசீதா |
| 27 | | 3) | பு.வைகுந்தன் |

## வாணிவிழாப் போட்டிகள்

| தொ.இல | விடயம் | தரம் | நிலை | மாணவர் பெயர் |
|---|---|---|---|---|
| 28 | திருக்குறள் | 1 | 1 | ஜெ.மிதுர்ஷன் |
| 29 | | | 2 | நா.கீர்த்தனா |
| 30 | | | 3 | க.கபில்ராஜ் |
| 31 | திருக்குறள் | 2 | 1 | மு.கவிதன் |
| 32 | | | 2 | சி.அபிநயா |
| 33 | | | 3 | சு.திலக்ஷன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 34 | திருக்குறள் | 3 | 1 | சு.கஜரூபன் |
| 35 | | | 2 | பா.ஹரிகரன் |
| 36 | | | 3 | ச.மதுஷன் |
| 37 | திருக்குறள் | 4 | 1 | செ.ஊர்மிளா |
| 38 | | | 2 | ஜெ.வசீகரன் |
| 39 | | | 3 | ச.கௌசிகன் |
| 40 | திருக்குறள் | 5 | 1 | க.ஆர்த்திகா |
| 41 | | | 2 | த.பிரவீன் |
| 42 | | | 2 | த.கோகுலன் |
| 43 | பண்ணிசை | 1 | 1 | கெ.ஆதித்தியா |
| 44 | | | 2 | க.யாழினி |
| 45 | | | 3 | ந.யாழினி |
| 46 | பண்ணிசை | 2 | 1 | சு.சரண்யா |
| 47 | | | 2 | ந.நிதுர்சா |
| 48 | | | 3 | அ.சோபிகா |
| 49 | பண்ணிசை | 3 | 1 | சி.நிஷாங்கனி |
| 50 | | | 2 | லி.ஜெயசுதா |
| 51 | | | 3 | பி.துஷ்யந்தினி |
| 52 | பண்ணிசை | 4 | 1 | து.பிரதிகா |
| 53 | | | 2 | அ.துஷ்யந்தினி |
| 54 | | | 3 | கி.நித்திலா |
| 55 | பண்ணிசை | 5 | 1 | து.மாலோகன் |
| 56 | | | 2 | கு.வைதேகி |
| 57 | | | 3 | ம.ஐஸ்வர்யா |

| | | | | |
|---|---|---|---|---|
| 58 | பேச்சு | 1 | 1 | சி.லக்ஷியா |
| 59 | | | 2 | பி.வைஷ்ணவி |
| 60 | | | 3 | யோ.ரகீஷன் |
| 61 | பேச்சு | 2 | 1 | த.மதுஷா |
| 62 | | | 2 | ஜெ.நிசோபா |
| 63 | | | 3 | சி.சுமணன் |
| 64 | பேச்சு | 3 | 1 | ம.துஷிதா |
| 65 | | | 2 | சி.தனுஷா |
| 66 | பேச்சு | 4 | 1 | மு.பாவலன் |
| 67 | | | 2 | பா.லக்ஷனா |
| 68 | | | 3 | இ.கிரிதர் |
| 69 | பேச்சு | 5 | 1 | கி.நிரோஜன் |
| 70 | | | 2 | இ.அனித்தா |
| 71 | | | 3 | கி.துசாரா |
| 72 | | | 3 | சி.சதீஸ்வரன் |
| 73 | தோரணம் | 1 | 1 | ஜெ.மயூரா |
| 74 | | | 2 | சு.மதுஷன் |
| 75 | | | 3 | உ.கௌசிகா |
| 76 | சரம் | 2 | 1 | க.சந்துஜன் |
| 77 | | | 2 | வி.ஜானகி |
| 78 | | | 3 | சி.பிரவீணா |
| 79 | மாலைகட்டுதல் | 3 | 1 | செ.நிஷாளினி |
| 80 | | | 2 | ம.கார்த்திகா |
| 81 | | | 3 | த.வைஷ்ணவன் |
| 82 | மாலைகட்டுதல் | 4 | 1 | சி.வைஷ்ணவி |

| | | | | |
|---|---|---|---|---|
| 83 | | | 2 | ம.அசோக்குமார் |
| 84 | | | 3 | கி.ஷ்டேனிக்கா |
| 85 | கோலம்போடுதல் | 5 | 1 | சி.விஷ்னுபிரதாப் |
| 86 | | | 2 | இ.மதுஷைன் |
| 87 | | | 3 | க.நிவேதன் |
| 88 | நடனம் | 1 | 1 | பி.வைஷ்ணவி |
| 89 | | | 2 | சி.லக்ஷிகா |
| 90 | | | 3 | சி.மிதுளா |
| 91 | நடனம் | 2 | 1 | சு.சரண்யா |
| 92 | | | 2 | சி.அபிநயா |
| 93 | | | 3 | பி.அபிநயா |
| 94 | நடனம் | 3 | 1 | சி.நிஷாங்கனி |
| 95 | | | 2 | சி.வினோதினி |
| 96 | | | 3 | சி.பாமிலா |
| 97 | நடனம் | 4 | 1 | து.பிரதிகா |
| 98 | | | 2 | ஜெ.நிவேதா |
| 99 | | | 3 | தி.சஞ்சிகா |
| 100 | நடனம் | 5 | 1 | சி.விதுர்ஷா |
| 101 | கட்டுரை | 2 | 1 | ச.கேமதர்சன் |
| 102 | | | 2 | ம.கவியரசன் |
| 103 | | | 3 | சு.சஞ்சீவன் |
| 104 | கட்டுரை | 3 | 1 | பா.வினோஜன் |
| 105 | | | 2 | கு.ஆர்த்திகா |
| 106 | கட்டுரை | 4 | 1 | பா.பாலாஜினி |
| 107 | | | 2 | ச.விதுர்சா |

| | | | | |
|---|---|---|---|---|
| 108 | | | 3 | த.டினேஸ் |
| 109 | கட்டுரை | 5 | 1 | சு.விேனாதன் |
| 110 | | | 2 | பு.வைகுந்தன் |
| 111 | | | 3 | செ.நிதர்ஸன் |

## ஆங்கில தினப் போட்டி

112 Copy Writing செல்வி.குருசாமி ஆர்த்திகா (வலயம்) - 2

## தமிழ் மொழித்தினம்

## கோட்ட மட்ட போட்டியில் தெரிவு செய்யப்பட்டோர்.

| | | | |
|---|---|---|---|
| 113 | செல்வன் து. மாலோகன் - | வாசிப்பு | 1ம் இடம் |
| 114 | செல்வன் த. கோகுலன் - | பேச்சு | 1ம் இடம் |
| 115 | செல்வன் சி. சதீஸ்வரன் - | பாவோதல் | 1ம் இடம் |
| 116 | செல்வி க. ஆர்த்திகா - | தனிநடனம் | 1ம் இடம் |
| 117 | செல்வி து. பிரதிகா - | இசையும் அசைவும் | 1ம் இடம் |

## வலய மட்டப் போட்டிகள்

| | | | |
|---|---|---|---|
| 118 | செல்வன் து. மாலேகன் - | வாசிப்பு | 1ம் இடம் |
| 119 | செல்வன் த. கோகுலன் - | பேச்சு | 1ம் இடம் |
| 120 | செல்வன் சி. சதீஸ்வரன் - | பாவோதல் | 3ம் இடம் |
| 121 | செல்வி க. ஆர்த்திகா - | தனிநடனம் | 1ம் இடம் |
| 122 | செல்வி து. பிரதிகா - | இசையும் அசைவும் | 2ம் இடம் |

## மாவட்ட மட்ட போட்டிகள்

| | | | |
|---|---|---|---|
| 123 | செல்வன் து. மாலோகன் - | வாசிப்பு - | 1ம் இடம் |
| 124 | செல்வன் த. கோகுலன் - | பேச்சு - | 3ம் இடம் |
| 125 | செல்வி க. ஆர்த்திகா - | தனிநடனம் - | 3ம் இடம் |

## மாகாண மட்டப் போட்டி

126 செல்வன் து. மாலோகன் - வாசிப்பு - 2ம் இடம்

## சூழல் பாதுகாப்பு படையணி மாணவர்கள்

127 செ.சிந்துஜன்

128 நா.நிதர்சன்

129 ச.சுதர்சன்.

## புலமைப் பரிசில் பரீட்சை

| | | | |
|---|---|---|---|
| (1) | செல்வி கலைச்செல்வன் ஆர்த்திகா | - | 156 |
| (2) | செல்வி சற்குருநாதன் ஜசீதா | - | 156 |
| (3) | செல்வன் தனபாலசிங்கம் கோகுலன் | - | 153 |
| (4) | செல்வன் புவனேந்திரம் வைகுந்தன் | - | 148 |
| (5) | செல்வன் கனகராசா நிவேதன் | - | 147 |
| (6) | செல்வன் கிருபாகரன் நிரோஜன் | - | 143 |
| (7) | செல்வன் துரைசிங்கம் மாலோகன் | - | 142 |
| (8) | செல்வன் இராசரத்தினம் மதுஷன் | - | 139 |
| (9) | செல்வன் சுந்தரலிங்கம் வினோதன் | - | 138 |
| (10) | செல்வன் தர்மராஜா பிரவீன் | - | 138 |
| (11) | செல்வன் சிவனேசன் சதீஸ்வரன் | - | 138 |
| (12) | செல்வி குமாரசாமிக்குருக்கள் வைதேகி | - | 132 |
| (13) | செல்வி சிவகுமார் விதுர்ஷா | - | 129 |
| (14) | செல்வன் கைலாசநாதன் பிரணவன் | - | 126 |

## புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு அண்மித்த மாணவர்கள்

| | | |
|---|---|---|
| **செல்வி செல்வகுமார் தர்சிகா** | - | **122** |
| **செல்வி கிருஷ்ணகுமார் சாதனா** | - | **121** |

## சிறந்த மாணவன்

***செல்வன்.பு.வைகுந்தன்***

THE PHONE SHOP , NELLIADY.